★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

'திருடியின் மகன்' என்ற அவமானத்தைத் தாங்காமல்

தாயைக் கொன்ற மகனுக்கு ஆயுள் தண்டனை

பெற்ற தாயையே கொன்றுவிட்டான், 14-வயதுடைய பள்ளி மாணவன் ஒருவன். அவனை விசாரித்த கார்கோதா மாவட்ட நீதிபதி அவனுக்கு ஆயுள் தண்டனை விதித்தார்.

அந்தத் தாய், பிறருடைய நகைகளையும், துணிகளையும் திருடி விட்டாளாம். அவனுடைய மகனுடன் படித்தவர்கள், ...

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 3] சென்னை: தை 4உ செவ்வாய் (17—1—56) ★ ★ வெளியூர்: தை 5உ புதன் (18—1—56) [இதழ் 104

டெல்லி ஆதிபத்திய முடிவின் எதிரொலி

தமிழர் தலையில் டில்லியார் அள்ளிவீசும் பெரு நெருப்பு

செங்கோட்டையின் பகுதிகூட கேரளத்திற்குத்தானும்

தேவிகுளம், பீர்மேடு தமிழ் வட்டங்கள் தமிழர்களுக்கு இல்லையாம்

புதுடெல்லி, ஜன. 16—

மாநிலப் புதுஅமைப்புத் திட்டம் குறித்த இந்தியப் பேரரசின் முடிவு தமிழர்களின் தலையில் பெருநெருப்பை அள்ளிக் கொட்டுவதாக அமைந்திருக்கிறது.

திரு—கொச்சியில் உள்ள ஒன்பது தமிழ் வட்டங்களில் 5 மட்டுமே தமிழ் நாட்டிற்குத் தரப்பட வேண்டும் என்று, மாநிலக் குழு சிபாரிசு செய்தது.

'தேவிகுளம், பீர்மேடு முதலிய நான்கு தமிழ் வட்டங்களும் தமிழகத்துடன்தான் இணைய வேண்டும்' என்ற தமிழர்களின் ஒன்றுபட்ட கோரிக்கையை இந்தியப் பேரரசினர் மதிக்காதது மட்டுமல்ல—குழு சிபாரிசு செய்திருந்த செங்கோட்டையின் ஒரு பகுதியையும் கேரளத்திற்குத் தந்துவிட வேண்டும் என்று முடிவு செய்திருக்கின்றனராம்.

மாநிலக் குழுவினரே தங்கள் அறிக்கையில், 'செங்கோட்டை வட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில்தான் இணைய வேண்டும்' என்று திட்டமாகத் தெரிவித்திருந்தும்கூட, என்ன காரணத்தாலோ, தமிழர் பகுதிகளைக் கேரளத்திற்குச் சேர்த்துத் தர இந்தியப் பேரரசினர் முடிவு செய்திருக்கின்றனர்.

மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கே, செங்கோட்டை வட்டத்தின் மேல் பகுதி கேரள மாநிலத்திற்குப் போய்விடும்.

கேரளம் பற்றிய மாநிலக் குழுவின் சிபாரிசுகள் அப்படியே ஏற்றுக் கொள்ளப்படும்.

கர்நாடகம், மைசூர் என்ற பெயருடன் சிபாரிசுப்படி அமையும்.

பெல்லாரி பற்றிய விவாதங்கள் முடியவில்லை; பஞ்சாப் பற்றி இறுதி முடிவு இல்லை; 'மேற்கு வங்கத்திற்குத் தரப்பட வேண்டும்' என்று குழு சிபாரிசு செய்திருந்த பீகாரைச் சேர்ந்த இரு மாவட்டங்கள் மேற்கு வங்கத்திற்குத் தரப்பட மாட்டாது; பம்பாய் மராட்டியருக்குக் கிடையாது—மத்திய சர்க்கார் வசமாகும்; குழுவினரின் சிபாரிசுப்படி ஒரிசா அப்படியே இருக்கும்; மத்தியப் பிரதேசம் சிபாரிசுப்படி அமையும்.

தெலிங்கானா பற்றி இறுதி முடிவு இல்லை—என்பன போன்றவை முடிவுகளின் இதர முக்கிய அம்சங்களாம்.

★

மாநில புது அமைப்பு

இந்திய சர்க்கார் முடிவு விபரங்கள்

மாநிலப் புது அமைப்புத் திட்டம் குறித்து, இந்தியப் பேரரசு தனது முடிவுகளை இன்று அறிவித்திருக்கிறது.

மாநிலக் குழுவின் சிபாரிசுகள் பலவற்றை அப்படியே ஏற்றுக்கொள்வதெனவும், சிலவற்றை சில திருத்தங்களுடன் ஏற்றுக் கொள்வதெனவும் இந்தியப் பேரரசு முடிவு செய்திருக்கிறது.

பிரதமர் என்ற முறையில் அல்லாது தனிப்பட்ட முறையில் என்று, முன்னுரையுடன் பண்டித நேரு தெரிவித்த 'மண்டல மன்றங்கள்' அமைப்பது என்ற யோசனையையும் டில்லி சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கின்றனராம்.

மாநிலங்கள் 'ஏ', 'பி', 'சி' என்று பிரிக்கப்பட்டிருப்பதை ஒழிக்கவும், இராஜப் பிரமுகர்கள் உதவியை நீக்கவும் குழுவினர் செய்த சிபாரிசுகளை இந்தியப் பேரரசினர் முடிவுகளாக்கிவிட்டனராம்.

நான்கு இலட்சம் ஆலைத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

பொதுமக்களுக்கு துப்பாக்கிக்குண்டுகள் பரிசு

14 தொழிற்சங்கத் தலைவர்கள் உட்பட 435 பேர் கைது

பம்பாய்நகரில் பெரும் கொந்தளிப்பு

பம்பாய், ஜன. 16—

பம்பாய் நகரைத் தலைநகராகக் கொண்ட மகாராஷ்டிர மொழி மாநிலம் வேண்டுமென்பது மராட்டியர்களின் நீண்ட நாளையக் கோரிக்கையாகும். அக்கோரிக்கைக்கு மராட்டியரின் பூரண ஆதரவு இருக்கிறது.

பம்பாய் நகராட்சி மன்றம், இக்கோரிக்கையை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. மராட்டியர்களின் ஆத்திரத்தின் காரணமாக, பம்பாய் சட்டசபையில் மாநில சீரமைப்புக் குழு சிபாரிசின்மீது நடைபெறவிருந்த விவாதம் நடைபெறாமலே நிறுத்தப்பட்டுவிட்டது.

பம்பாய் நகரைப் பெறுவதற்குரிய உரிமை மராட்டியர்களுக்கு இயல்பாகவே இருந்தும், ஜனநாயக ரீதியில் அதற்குத் தேவைப்படும் மக்களின் பேராதரவு இருந்தும், பம்பாய் நகரை மராட்டியர் பெற முடியாமல் தடை செய்துவிட்டார் இந்தியப் பிரதமர் பண்டித நேரு.

அதன் எதிரொலியாகப் பம்பாய் நகரில் மீண்டும் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது.

தனது முடிவைப் பிரதமர் வானொலி மூலம் அறிவித்து முடித்தவுடன், மக்களின் ஆத்திரம் கட்டுமீறிவிட்டிருக்கிறது.

பம்பாய் நகரின் மத்தியப் பகுதியில் ஒரு கட்டிடத்திற்குத் தீயிட முனைந்ததாகக் கூறி, பொதுமக்கள் மீது போலீஸ் துப்பாக்கிப்பிரயோகம் செய்திருக்கிறது.

"கற்களை வீசி எறிந்தனர்; கட்டிடத்திற்குத் தீயிட முயன்றனர்; எனவே, போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டியதாயிற்று" என்று போலீஸ் துறை புகல்கிறது.

'ஒரு டிராம் காரைத் தீக்கிரையாக்கிவிட்டனர்; பஸ்கள்மீது கற்களை வீசியெறிந்து சேதமுண்டாக்கினர்; கற்களின் தாக்குதலால் ஏறத்தாழ பன்னிரண்டு பஸ்கள்வரை நாசமடைந்துள்ளன'—இப்படித் தகவல் தரப்பட்டிருக்கிறது;

சாந்தாகுருஸ் பகுதியில் ஒரு போலீஸ் நிலையம் சுட்டெரிக்கப்பட்டதாம். முழுதும் சாம்பலாவதற்குள் கட்டிடம் காப்பாற்றப்பட்டதாம்.

பலப்பல வீதிகளில், எரி பொருட்களை அடுக்கிவைத்துக் கொளுத்தப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

போலீஸ் துப்பாக்கிப்பிரயோகத்தால் ஒரு பெண் உட்பட எண்மர் படுகாயமடைந்துள்ளனர் என்றும், ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

16 தொழிற்சங்கத் தலைவர்கள் உட்பட 435 தொழிலாளர்களைப் போலீசார் கைது செய்திருப்பதாகவும், அதன் எதிரொலியாக நான்கு இலட்சம் ஆலைத் தொழிலாளர்கள்வரை வேலை நிறுத்தம் செய்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

தலைவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழும், மற்றவர்கள் 151 போலீஸ் சட்டத்தின்கீழும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

62 நெசவாலைகள் மூடிக்கிடக்கின்றன. வடக்கு பம்பாயில் உள்ள இரண்டு இரயில்வே தொழிற்சாலைகளிலும் வேலை செய்து வந்த 12,000 தொழிலாளர்கள் வெளியேறிவிட்டனர். பற்பல விதமான தொழிற்சாலைகளும், தொழிலாளர் வெளியேறிவிட்டதால் மூடிக்கிடக்கின்றன.

இந்தியப் பிரதமரின் வானொலிப் பேச்சு முடிவுற்றதும், வடக்கு பம்பாயில் சிவாஜி பார்க்கில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய காட்கில், 'இம்முடிவை நாங்கள் ஏற்க மாட்டோம் என்பதைப் பிரதமருக்குத் திரிகரணசுத்தியாக அறிவித்துக் கொள்ளுகிறோம்' எனக் குறிப்பிட்டுள்ளார். சுமார் இரண்டு இலட்சம் மக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

'தவறான திட்டமாகும்'

டாக்டர் சி. வி. ராமன் எச்சரிக்கை

"இப்போது ஆங்கிலம் உபயோகிக்கப்படும் எந்த ஒரு காரியத்திற்கும், எந்த ஒரு அரசாங்க அலுவலுக்கும் இந்தியை உபயோகிப்பது என்ற திட்டம் முழுவதும் தவறான ஒன்றாகும்."

"இந்த மாற்றம் உபயோககரமான எந்த ஒரு காரியத்திற்கும் உதவாது என்பது மட்டுமல்ல, ஏற்கனவே நிலவிக்கொண்டிருக்கும் மொழிச் சிக்கலை அதிகமாக்கி, இந்தியாவின் பல துறை முன்னேற்றங்களுக்கும் முட்டுக்கட்டையாக விளங்கும்.

"இந்த மேல் இரண்டு வாக்கியங்களும் உண்மை—முழு உண்மை; உண்மையைத் தவிர இதில் வேறெதுவும் இல்லை என்றும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்,"

என்று, டாக்டர் சி. வி. ராமன் இந்தித் திணிப்புக் குழுவினரிடத்தில் சாட்சியமளிக்கும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகச் செய்தி

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

29-1-56-ல் சிதம்பரத்தில்

நடைபெறும்

—தி. மு. க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

11,000 பேர் பணியாற்றுகின்றனர்!

பாட்னா, ஜன. 13—

கோசி நதியின் இருகரைகளிலும் கடந்த டிசம்பர் திங்களிலிருந்து சுமார் 11,000 பேர் தினந்தோறும் வேலை செய்து கொண்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

தோழர் கருணாநிதி வழங்கிய 'உலா' வரும் வெள்ளிக் கோப்பை

திராவிடர் திருநாளன்று நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் அதிகமான வெற்றிபெறும் வட்டக் கிளைக்கு அளிப்பதற்கென ஒரு 'உலா' வரும் வெள்ளிக் கோப்பையை தோழர் மு. கருணாநிதி அவர்கள் சென்னை மாவட்ட தி.மு. கழகத்திற்கு அளித்திருக்கிறார்.

இந்த ஆண்டு முதல், 'உலா'த் தொடங்கும் அந்தக் கோப்பையை, கடந்த 14—1—56 அன்று ரேப்பியர் பூங்காவில் சென்னை மாவட்ட தி. மு. கழகம் நடத்திய திராவிடர் திருநாள் விளையாட்டுப் போட்டிகளில் அதிகமான வெற்றிகளைப் பெற்ற 14-வது வட்டக் கிளையினர் தட்டிக்கொண்டு போயினர்.

பரிசு பெற்றோர் விவரங்கள் மூன்றும் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளன.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 17—1—'56 செவ்வாய்

ஏன் ஆத்திரம்?

சேலம் ஆத்தூர் பகுதியில் உள்ள ஆனையாம்பட்டிக்கு முதலமைச்சர் கனம் காமராசர் சென்றிருக்கிறார். அவரை, அவ்வூர் காங்கிரஸ் கட்சியினரும், மற்றவர்களும் வரவேற்று உபசாரம் செய்திருக்கிறார்கள்.

அங்கு, அவர் காண நேர்ந்த ஒரு காட்சி அவருக்கு ஆத்திரமூட்டியிருக்கிறது. ஆத்திரமடைந்த பின்னர் ஒருவரால் வாய்மூடியா இருக்க முடியும்? அதிலும், முதலமைச்சர் வாய்மூடிக் கிடப்பதென்பது, அப்பதவிக்குப் பொருத்தமான தாகுமா?

அங்கு இந்தியப் பேரரசின் தேசியக் கொடி உயரமான ஒரு கம்பத்தில் பறந்து கொண்டு இருந்தது; அதன் அருகிலேயே மற்றொரு கம்பத்தில் நமது திராவிட முன்னேற்றக் கழகக் கொடியும் பறந்துகொண்டிருந்தது. தேசியக் கொடியைக் காட்டிலும் சில அடி உயரத்தில் கழகக் கொடி பறந்து கொண்டிருந்தது. இந்த உயர மாற்றந்தான் கனம் காமராசருக்கு ஆத்திரத்தை மூட்டியிருக்கிறது.

தேசியக் கொடியைக் காட்டிலும் சில அடி உயரமாகக் கழகக் கொடி பறந்து கொண்டிருப்பது, தேசியக் கொடிக்கு இழைக்கும் அவமரியாதையாகும் என முதலமைச்சர் கோபித்துக் கொண்டிருக்கிறார். இனி எதிர்காலத்தில் இவ்வாறு நடைபெறக் கூடாது எனவும் அங்குள்ளாரை எச்சரித்துமிருக்கிறார், முதலமைச்சர்.

அவ்வாறு நேர்ந்தமைக்கு விளக்கங் கூறி, கனத்தின் கோபத்தைத் தணிக்க முயற்சித்திருக்கின்றனர், உள்ளூர் காங்கிரஸ் கட்சியினரும், கழக முக்கியஸ்தர்களும். அவர்கள் விளக்கத்தைக் கேட்க மறுத்து, அவர்களை வாய்மூடி உட்காரும்படி கட்டளையிட்டிருக்கிறார், முதலமைச்சர்.

ஏற்கனவே அவ்விடத்தில் வெவ்வேறு கம்பத்தில், ஒன்றிற்கொன்று அருகில், காங்கிரஸ் கட்சிக் கொடியும் கழகக் கொடியும் பறந்து கொண்டிருந்தன. முதலமைச்சர் வருகையை நினைத்து, பறந்து கொண்டிருந்த காங்கிரஸ் கட்சிக் கொடிக்குப் பதிலாக இந்தியப் பேரரசின் தேசியக் கொடியை ஏற்றிவைத்திருக்கிறார்கள் காங்கிரஸ்கட்சியினர்.

இவ்விளக்கத்திற்கும், தேசியக் கொடியை ஏற்றி இருக்கவே கூடாது என்றும், ஏற்றினதின் மூலம் தவறு செய்திருப்பதாகவும முதலமைச்சர் கண்டித்துக் கூறி இருக்கிறார்.

ஒரே கம்பத்தில் இந்தியப் பேரரசின் தேசியக் கொடியையும், அதற்குச் சில அடி உயரத்தில் கழகக் கொடியையும் ஏற்றிப் பறக்கவிட்டிருந்தாலாவது, தேசியக் கொடிக்கு அவமரியாதைச் செய்ததாக முதலமைச்சர் பொருள் கொண்டு ஆத்திரமடைந்திருக்கலாம். அப்போக்குத் தவறானது என நாமும் கண்டிக்கப் பின்வாங்க மாட்டோம்.

ஆனால் உண்மை அதற்கு மாறாக இருக்கிறது. தேசியக் கொடி ஒரு கம்பத்திலும், கழகக் கொடி வேறு ஒரு கம்பத்திலுமாக பறந்துகொண்டு இருக்கின்றன. தேசியக் கொடியைக் காட்டிலும் சிறிதளவு உயரமாகக் கழகக் கொடி கட்டப்பட்டுப் பறந்து கொண்டிருக்கிறது. இதில், தேசியக் கொடிக்கு ஆனையாம்பட்டியார் இழைத்த அவமரியாதை என்ன இருக்கிறது என்பதை நம்மால் விளங்கிக்கொள்ளக் கூடியதாக இல்லை.

இந்தியப் பேரரசின் தேசியக் கொடியை, எப்பொழுது, யார் யார், எங்கெந்த இடங்களில் பறக்கவிடலாம் என்ற திட்டவட்டமான ஏற்பாடு இருக்கத்தான் இருக்கிறது. அந்த ஏற்பாட்டில், தேசியக் கொடி இவ்வளவு உயரத்தில்தான் பறக்கப்பட விடவேண்டுமென்றோ, மற்ற அரசியல் கட்சிகளின் கொடியைவிட உயரத்தில்தான் பறக்கப்பட விடவேண்டுமென்றோ வரையறை அறவே கிடையாது. அப்படி இருந்தாலாவது, கழகக் கொடியைக் காட்டிலும் தேசியக் கொடி தாழப் பறந்து கொண்டிருப்பதற்காக முதலமைச்சர் கோபித்துக் கொண்டதில் நியாயமிருக்க முடியும்; ஆனையாம்பட்டியாரை முதலமைச்சர் கடிந்துரைத்ததிலும் பொருள் இருக்க முடியும்.

ஏற்கனவே பறந்துகொண்டிருந்த காங்கிரஸ் கட்சிக் கொடியை இறக்கிவிட்டு, முதலமைச்சர் வருகிறாரே என்பதற்காகத் தேசியக் கொடியை ஏற்றி இருக்கிறார்கள் ஆனையாம்பட்டி காங்கிரஸ் கட்சியினர். அந்தச் செயல் எதைக் காட்டுகிறது? தேசியக் கொடியைக் கவுரவித்துப் பாராட்ட வேண்டுமென ஆனையாம்பட்டியினர் மனப்பூர்வமாகக் கருதினர் என்பதைத்தானேயல்லாது, முதலமைச்சர் பொருள் கொண்டு கோபித்துக்கொண்டதுபோல்,தேசியக் கொடியை இழிவுபடுத்த வேண்டும் என்பதை அல்ல.

இத்தனை அடி உயரத்தில் தான் தேசியக் கொடி பறக்கவிடப்பட வேண்டும்; அதனருகில், அதற்கும் உயரத்தில் வேறு ஒரு கொடியும் பறக்கக் கூடாது என்ற கண்டிப்பான ஏற்பாடு இல்லாத வரையில், கழகக் கொடியிலும் உயரத்தில் குறைவாக தேசியக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது என்பதற்காக, தேசியக் கொடிக்கு அவமரியாதை செய்யப்பட்டதாக முதலமைச்சர் கோபித்துக்கொள்ளுவதும் கடுஞ்சொல் கூறுவதும் பொருந்துமாறு இல்லை. இக்கொடி சம்பவத்தை ஒரு புகலாகக் கொண்டு, முதலமைச்சர் காமராசர் கோபித்துக் கடுஞ்சொல் வீசியிருக்கிறார் என்றுதான் கொள்ளவேண்டியதாக இருக்கிறது.

சென்ற சில நாட்களாகவே, நமது கழகம் என்றாலே கனம் முதலமைச்சருக்குக் கடுங் கோபம் வருகிறது—வசை மொழிகளை அள்ளி அள்ளி வீசவும் செய்கிறார்.

ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வித் திட்டத்தை ஒழித்துக் கட்டினதினாலும், ஜனநாயகப் பண்பாட்டைக் காட்டிக் கொள்ள அவர் தேர்தலில் ஈடுபட்டதாலும், அவரை நாம் மனமாரப் பாராட்டினோம். அப்பாராட்டுதலின் உண்மைப் பொருளை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் முதலமைச்சராக இருக்கும் வரையில், அவரை ஆதரிக்க நாம் அடிமை முறிச் சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டதாக அப்பாராட்டுதலை, அவர் தவறுகத் தீர்மானித்துகொண்டார். காலப்போக்கில், நாம் யார் என்பதை முதலமைச்சர் அறியத் தொடங்கியதும், அவருக்கு நம்மீது ஆத்திரம் பொங்கி வழிகிறது. இதுதான் உண்மை. அதற்கு நாம் என்ன செய்வது?

ஆனையாம்பட்டியில் தேசியக் கொடி உயரப் பறந்துகொண்டிருந்தாலும், தாழப் பறந்து கொண்டிருந்தாலும் அவருக்குக் கோபம் பிறந்திருக்காது. நமது கழகக் கொடி மிக உயரத்தில் பறந்துகொண்டிருந்ததுதான் முதலமைச்சருக்கு மருட்சியைக் கொடுத்திருக்கிறது. எனவே, அச்சம்பவத்தை ஒரு புகலாகக் கொண்டு, தேசியக் கொடியை அவமதித்து விட்டதாகக் கூறி, நமது கழகத்தினிடம் அவருக்குள்ள வெறுப்பைக் காட்டிக் கொண்டிருக்கிறார், முதலமைச்சர். இது கண்டு, ஏன் ஆத்திரம் என்று முதலமைச்சரைக் கேட்கிறோம்.

'தாயகத்தை மீட்கத் திருநாளில் உறுதி கொள்வீர்'

பொங்கல்விழாவில்என்.வி.நடராசன்

"தமிழகத்தில் அண்மையில் தஞ்சை, மதுரை, இராமநாதபுரம், திருச்சி மாவட்டங்களில் ஏற்பட்ட புயலின் சேதங்களினுல் நம் தோழர்கள் குடும்பத்தாரை இழந்து, உற்றார் உறவினரை இழந்து தவிக்கின்றார்கள். அவர்கள் இல்லங்களிலே பொங்கல் பொங்காது. அந்தத் தோழர்களின் துன்பங்களை நாம்தான் துடைத்தாக வேண்டும். இப்படிப்பட்ட இன்னல்கள் ஏற்படாத வகையில் நாம் அவர்களுக்கு உதவ, திராவிடர் திருநாளாம் இன்றே உறுதிகொள்ள வேண்டும் மற்றொரு உறுதி நம் இளைஞர்கள் கொள்ள வேண்டும். பொதுச்செயலாளர் அவர்கள் அறிக்கைப்படி நம் கழகத்திற்கு உறுப்பினர்களைத் திரட்டித் தர வேண்டும். இந்த இன்பத் திருநாளில் நாம் மற்றொரு இன்னலுக்கி ஆளாகியிருக்கிறோம். நம் தமிழகப் பகுதிகளை திரு—கொச்சி மாநிலத்துடன் சேர்த்திருக்கிறார்கள். அதனை மீட்டிட இன்றே, இந்தத் திராவிடர் திருநாளிலே இளைஞர்கள் உறுதி கொள்ள வேண்டும்,"

—என்று, 14—1—56 காலை 9 மணிக்கு, சென்னை-வண்ணை 4-வது வட்ட இளைஞர் முன்னேற்ற மன்றத்தின் முதல் ஆண்டு விழாவும், திராவிடர் திருநாளும் நடைபெறுகையில், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்

கூட்டத்திற்குத் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமை தாங்கினார்.

தோழர்கள் பி. எம். இராமையா, மு. பெருமான், தி. கி. சம்பந்தன், கோ. வெற்றிவீரன், கே. எ. மதியழகன், என். வி. நடராசன் ஆகியோர் பேசினர்.

என். வி. நடராசன் அவர்கள் மன்றக் கொடியை ஏற்றிவைத்தார்.

தோழர் என். வி. நடராசன் அவர்கள் தொடர்ந்து பேசியதாவது :—

"பத்து ஆண்டுகளுக்கு முன்னதாக திராவிடர் திருநாள் பொங்கல் நன்னாள் என்றால் எவரும் புரிந்து கொள்ள முடியாத காலமாக இருந்தது. இந்த நாளில் அனைவரும் ஒன்றுகூடி எதிர்கால நல்வாழ்வுக்கான பாதையமைக்கும் விழாவாக, தேசிய விழாவாகக் கொண்டாடுகிறோம். மற்றைய விழாக்கள் எல்லாம் ஒரு சாரார் மட்டும் கலந்து கொள்ளக் கூடியதாகப் பரவியுள்ளன. ஆனால் பொங்கல் நாளாகிய திராவிடர் திருநாளில் எல்லாமக்களும் ஒன்றுகூடி விழாக் கொண்டாடுகின்றனர். 'கட்சி' ஜாதி, மதம் கடந்து நாம் அத்தனை பேரும் மனிதாபிமானத்துடன் வாழவேண்டுமென்பதே இவ்விழாவின் நோக்கம். இந்த இன்பநாளில், 'திராவிட நாடு திராவிடருக்கே' ஆகவேண்டும் என்ற உரிமை முழக்கத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களாகிய நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். ஆந்திரர்கள் அவர்களின் உரிமையை விட்டுக் கொடுத்தோ, கேரளத்தவர்கள் அவர்களின் உரிமையை விட்டுக் கொடுத்தோ, கன்னடத்தவர்கள் அவர்களின் உரிமையை விட்டுக் கொடுத்தோ திராவிட நாடு வேண்டும் என்று பேசவில்லை. அவரவர்களுக்குச் சேரவேண்டிய பகுதிகள் அவரவர்கள் பெற்றிருக்க வேண்டும்

"இன்று வடநாட்டவர்களின் சூழ்ச்சியினால் நமக்குச் சேரவேண்டிய தமிழகப் பகுதிகள் திரு—கொச்சி மாநிலத்தில் இணைக்கப்படுகின்றன. அந்தத் தமிழ்ப் பகுதிகளை நாம் திரும்பப் பெற்றாக வேண்டும். நாம் அடுத்த ஆண்டு கொண்டாடும் இத்திருநாளுக்குள்ளாக நமது தமிழகப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்துடன் நாம் சேர்த்தாக வேண்டும்.

"மொழி வெறி இன்றைக்குத் தலைவிரித்தாடுகிறது. மொழிப் பிரச்சினைக் குழுவிலே சாட்சியம் கூறும் அத்தனைப் பேரும் இந்தியை எதிர்க்கின்றார்கள்; சிலர் மறைமுகமாயும், சிலர் தைரியமாகவும் எதிர்ப்புணர்ச்சியுடன் கருத்தறிவிக்கின்றனர்.

"இன்று எங்கு நோக்கினும் மொழியின்மீது பற்று வளர்ந்துள்ளது. அந்தப் பற்றுக்கு வித்திட்டவர்கள் நாம்தான்; அந்த மொழி உணர்ச்சிக்காகத்தான் நம் அருமைத் தோழர்கள் தாளமுத்து—நடராசனைப் பலிகொடுத்தோம்!—ஆச்சாரியார் ஆட்சிக் காலத்தில்!

(4-ம் பக்கம் பார்க்க)

'தொழிலாளர் மதிப்புப்பெற வகை செய்வோம்'

'தமிழர்களுக்குப் புத்துணர்ச்சி தருவதாக பொங்கல் விழா அமையட்டும்'

சென்னையில் கருணாநிதி கருத்துரை

"'பொங்கல்' என்ற பெயரிலேயே தாயக உணர்ச்சியும், மொழிஉணர்ச்சியும் அடங்கியிருக்கக் காண்கிறோம். தாயக இயக்கத்தை வளர்க்கவும் — தமிழர்களுடைய திருநாட்டை மீட்கவும், திராவிட நாடு திராவிடருக்கு ஆக்கிடவும் உணர்ச்சி ஊட்டப்படும் நாள்—இந்நாள்'!

"சென்னையில் திராவிடர் திருநாளைக் கொண்டாடிடும் இதே நேரத்தில், கோவையிலே இதே விழாவினை நம் தோழர்கள் கொண்டாடுகின்றனர்; சேலத்திலே—தஞ்சையிலே - திருச்சியிலே இவ்விழாவைக் கொண்டாடுகின்றனர்.

"நம் நாடு விடுதலை பெற்ற நாடாக, சுதந்திர பூமியாகத் தெரிவது எந்நாளோ? அந்நாளை விரைவில் உண்டாக்கிட இந்நாளில் உறுதிகொள்வோமாக!

"கனவை நனவாக்கிடும் நாள் வெகுதூரத்திலில்லை. உழைப்பாளர் நாளில், இந்த நேரு சர்க்கார் ஆட்சியில் சமுதாயத்துறையில் - அரசியல் துறையில் — பொருளாதாரத் துறையில் உழைப்பாளர்களுக்குக் கொடுக்கப்படும் மதிப்பென்ன?

"ரஷ்யாவில் உழைப்பாளர்களுக்கு மதிப்புத் தரப்படுகிறது. அரியபெரிய சாதனைகளைச் சாதிப்பவர்களுக்கு, அருமையான ஆலைகளை உண்டாக்குபவர்களுக்கு, அருமையான தோட்டங்களை அமைப்பவர்களுக்குத் தரப்படுகிறது - 'லெனின் மெடல்,' 'ஸ்டாலின் பதக்கம்' - என்று!

"ஆனால் - இந்த நாட்டில்?

"பொன் சுரங்கங்களிலே 10 ஆயிரம் அடிக்குக் கீழே பாட்டாளிகள் வேலை செய்கின்றனர். அந்தக் குகையின் சுவரிலே மாட்டப்பட்டிருந்த படங்களைக் கண்டோம் - வீரரின் படங்களை அல்ல;விவேகளின் படத்தை அங்கே காணவில்லை; முருகனுடைய படத்தைக் கண்டோம் - பிள்ளையார், சரசுவதி, இலட்சுமி படங்களைக் கண்டோம்.

"சுப்பிரமணியத்தைப் பற்றிப் படித்திருக்கிறோம்; மலைகளை எல்லாம் பொடிப்பொடியாக ஆக்கிய 'வேல்,' அங்கு பயன்படவில்லை - வெள்ளையன் உண்டாக்கித் தந்த கருவிகள்தான் உபயோகப் படுகின்றன.

"பிள்ளையார் துதிக்கை அங்கு 'லிப்டா'கப் (பாரம் தூக்கி) பயன்படவில்லை.

"இரத்தம் சுண்டச்சுண்ட, வெப்பத்திலே அவதிப்பட்டுப் பாடுபடும் தொழிலாளிக்கு அங்கு மதிப்பில்லை; ஆண்டவனுக்கு அங்கே மதிப்பு!

"எனவே தொழிலாளர்களுக்கு மதிப்பு அளிக்கும் வகையினை உண்டாக்க வேண்டும். அந்த வகையினை உண்டாக்கும் விழாவாக இப்பொங்கல் விழா அமையட்டும்; தமிழர்களுக்குப் புத்துணர்ச்சியை உண்டாக்கும் விழாவாக அமையட்டும்; இவ்விழா, நம் நாட்டினைத் தனி நாடாக அமைத்திடும் விழாவாக அமையட்டும் என்று கூறிக்கொள்கிறேன்."

இவ்வாறு சென்னை திராவிடர் திருநாள் விழாக் கூட்டத்தில் பேசிய தோழர் மு. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டார்.

சென்னையில் திராவிடர் திருநாள்

போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம்

சென்னை மாவட்ட தி. மு. கழகத்தவர், 14—1—56 அன்று சிறப்பாகக் கொண்டாடிய திராவிடர் திருநாளின்போது நடத்திய விளையாட்டுப் போட்டிகள் பற்றிய விபரங்களும், அவற்றில் வெற்றி பெற்றோர் பெயர்களும் (முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என்ற வரிசையில்) இங்கு தரப்படுகின்றன :—

220 கெஜம் ஓட்டப்பந்தயம் :

1. டி. பாண்டியன்— 14-வது வட்டம்
2. ஆதிமூலம்—3-வது வட்டம்
3. டி. சுந்தரராசன்— 47-வது வட்டம்

அரை மைல் தூரம் ஓட்டப்பந்தயம் :

1. ஸ்டான்லி—9-வது வட்டம்
2. இமயவரம்பன்— 31-வது வட்டம்
3. வெற்றிவீரன்— 14-வது வட்டம்

உயரம் தாண்டுதல் :

1. அன்புமணி—6-வது வட்டம்
2. எம். ஆர். வெற்றிவீரன்— 14-வது வட்டம்
3. சேரன்—14-வது வட்டம்

நீளம் தாண்டுதல் :

1. சேரன்—14-வது வட்டம்
2. அன்புமணி—6-வது வட்டம்
3. சந்திரன்—6-வது வட்டம்

குண்டு விசுதல் :

1. செல்வராசன்— 8-வது வட்டம்
2. பாண்டியன்— 14-வது வட்டம்
3. திருநாவுக்கரசு— 6-வது வட்டம்

மெதுவாக சைக்கிள் ஓட்டுதல் :

1. எம். பாலசுந்தரம்—மாதவரம்
2. வெங்கடேசன்— 4-வது வட்டம்
3. இலக்குமணன்— 42-வது வட்டம்

வேகமாக சைக்கிள் ஓட்டுதல் :

1. கனகசபை— 42-வது வட்டம்
2. தங்கவேலு—44 வதுவட்டம்
3. இலக்குமணன்— 42-வது வட்டம்

சிறுமியர் 50 கெஜம் ஓட்டம் :

1. சாந்தி
2. வசந்தஇலக்குமி
3. மரகதம்

சிறுவர் 75 கெஜம் ஓட்டம் :

1. தேவராசன்
2. அனீபா
3. சுந்தரராசன்

கோணி கட்டிக்கொண்டு ஓட்டம் :

1. முருகேசன்— 24-வது வட்டம்
2. தமிழழகன்— 12-வது வட்டம்
3. வெங்கடேசன்— 22-வது வட்டம்

மாறுவேடம் அணிந்து வெற்றி பெற்றவர்கள் :

பைத்தியக்காரன் வேடம் அணிந்த தோழர் கருமுகில் முதலாவதாகவும், குருவிக்காரனுக வேடம் அணிந்த தோழர் இராமதாஸ் (11-வது வட்டம்) இரண்டாவதாகவும் வெற்றி பெற்றனர் (ச—தி)

பரீட்சை எழுதும் பெண்களுக்கு

போலீஸ் பாதுகாப்பு

புதுடில்லி, ஜன 16—

இந்திய நிர்வாகப் பணி, மற்றும், எம். ஏ. பட்டம் பெறுதல் இவற்றிற்காக நடைபெற்ற பரீட்சைகளில் கலந்துகொள்ள வந்த பெண்களுக்கு, டில்லி போலீசார் பாதுகாப்பளிக்க வேண்டியிருந்தது என்றும், இதற்குக் காரணம்,

(4-ம் பக்கம் பார்க்க)

'ஆங்கிலத்தை அகற்றக்கூடாது'

மைசூர் சர்க்கார் கருத்து

பெங்களூர், ஜன. 16—

"உலக மொழியாக ஆங்கிலம் வரக்கூடியதாகையால், அதை அகற்றிவிடக் கூடாது ;

"அரசாங்க சட்டசபை, நீதி மன்ற விவகாரங்களிலும், கல்வி போதனைக்கும் இந்தியுடன்கூட ஆங்கிலமும் இருந்து வரவேண்டும் ;

"சர்க்கார்துறைக் கடிதப் போக்குவரத்தில் ஆங்கிலத்தை அடியோடு 10 ஆண்டுகளுக்குள் நீக்குவதென்பது காரிய சாத்தியமற்றதாகும் ;

"ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியைப் பயன்படுத்தும் நிலை வருவதற்கு 1965-க்குப் பின்பும் அவகாசம் தேவை."

அரசாங்க மொழிக் குழுவின் முன்பு, மொழிப் பிரச்சினை பற்றிய தனது கருத்துக்களைத் தெரிவிக்கையில், இவ்வாறெல்லாம் மைசூர் சர்க்கார் கூறியுள்ளது.

பம்பாயிலும், கல்கத்தாவிலும் மத்திய சர்க்கார் காரியாலயங்கள்

பல இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்படுகின்றன

பம்பாய், கல்கத்தா ஆகிய இரு நகரங்களிலும் மத்தியசர்க்கார் காரியாலயங்களுக்காகவும், மத்திய சர்க்கார் சிப்பந்திகள் குடியிருப்புக்காகவும் மத்திய பொது மராமத்து இலாகா மேற்கொண்டுள்ள கட்டிட வேலைத் திட்டங்கள் வெகு துரிதமாக முன்னேறி வருகின்றன.

பம்பாயில் 1,28,650 சதுர அடி பரப்பளவு உள்ளதும், ஏழு அடுக்கு உள்ளதுமான கட்டிடம் ஒன்று ரூ 42,44,400 செலவில் சமீபத்தில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அக்கட்டிடத்தின் இரண்டாவது கட்ட வேலை சுமார் ரூ.28 இலட்சம் செலவில் சீக்கிரம் ஆரம்பமாகும் ; இரண்டு வருடத்தில் அது பூர்த்தியாகும்.

ரூ. 9,81,000 செலவில் மத்திய கலால் இலாகாவுக்காகப் பல மாடிக் கட்டிட வேலை சீக்கிரம் ஆரம்பமாகி இரு வருட காலத்தில் பூர்த்தியாகும்.

கப்பல் போக்குவரத்து டைரக்டர்-ஜெனரல் காரியாலயத்துக்காக ஏழு அடுக்குக் கட்டிடம் ஒன்று கட்டப்படும்.

கல்கத்தாவில் வருமான வரி இலாகாவுக்காக ஏழு அடுக்குக் கட்டிடம் ஒன்றுக்கு உடனடியாக வேலை துவங்க இருக்கிறது. 1956 இறுதியில் அது பூர்த்தியாகும். அதற்கு ரூ 55 இலட்சம் செலவாகும்.

பல்வேறு ஊதிய விகிதமுள்ளவர்களுக்கும் குடியிருப்பு வசதிக்காகப் பம்பாயில் 438 குடியிருப்பிடங்களைக் கட்ட சர்க்கார் அனுமதி வழங்கி இருக்கிறார்கள். அதற்கு ரூ. 57,41,200 செலவு பிடிக்கும். ஒரு வருடத்திற்குள் அவை தயாராகிவிடும். மேலும் 450 குடியிருப்பிடங்களைக் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. வாடாலாவில், புத்தகாலத் தற்காலிகமாக கட்டிடங்கள் இருந்த இடத்தில் 270 குடியிருப்பு இடங்கள் நிர்மாணிக்கப்படும்.

கல்கத்தாவில் ரூ. 52,97,000 செலவில் 466 குடியிருப்பிடங்களைக் கட்ட சர்க்கார் 1954-ல் அனுமதியளித்திருக்கிறார்கள் ; மார்ச் மாதத்திற்குள் அவை பூர்த்தியாகும். ரூ. 37,30,000 செலவில் மேலும் 282 குடியிருப்பிடங்களைக் கட்ட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

டில்லி வீதிகளுக்குப் பெயர் மாற்றம்

ஆங்கிலப் பெயர்கள் இந்தி மொழியில் மாறுகின்றன !

டில்லி சிவில் நிலைய வட்டாரக் குழுவினர் தங்கள் வட்டத்தில் உள்ள 43 சாலைகளின் பெயர்களை மாற்றியுள்ளனர்.

ஒன்பது சாலைகளுக்கு முற்றிலும் புதிய பெயர்கள் தரப்படுகின்றன.

சில சாலைகளுக்கு 'ரோடு' என்று பெயர் இருப்பதை 'மார்க்' (மார்க்கம், சாலை) என்று இந்தியில் அமைத்திருக்கின்றனர்.

மேலும் சில சாலைகளின் பெயர்களை இந்தியில் மொழி பெயர்த்து அமைத்திருக்கின்றனர். உதாரணமாக 'பேதிங் காட் ரோடு' என்று ஆங்கிலத்தில் இருந்த பெயர், 'ஸ்நான கட்ட மார்க்' என்றும் 'பிளாக் ஸ்டாப் ரோடு' என்றிருந்தது 'துவாஜா மார்க்' என்றும், 'யூனிவர்சிடி ரோடு' 'விஸ்வ வித்தியாலயம் மார்க்' என்றும் மொழிபெயர்த்து அமைக்கப்பட்டுள்ளனவாம்.

1. சர்ச்சியுவர் ரோடு—கோக்லே மார்க் ;
2. சென்ட்ரல் அவினியூ—படேல் மார்க் ;
3. இம்பீரியல் அவின்யூ—வித்யா மார்க் ;
4. கிங்ஸ்வே ரோடு—லோக் பாத் மார்க் ;
5. மாகஜின் ரோடு—தந்தியா தோபி மார்க் ;
6. மெட்காட் ஹவுஸ் ரோடு—இந்திரபிரஸ்தா மார்க் ;
7. புரோபின் ரோடு—சத்தர் மார்க் ;
8. பிரின்சஸ் ரோடு—ஜெனரா மார்க் ;
9. பட்லர் ரோடு—பாத்சாலை மார்க்.

திராவிட முன்னேற்றக் கழக 2-வது

மாநில மாநாடு

திருச்சியில் 1956 மே திங்கள்

3, 4, 5, 6

வியாழன் வெள்ளி சனி ஞாயிறு

நாட்களில் நடைபெறும்

—தி. மு. கழகத் தலைமை நிலையம்

நேருவின் எதேச்சாதிகாரப் போக்கு

'தனித்து வாழுவோம்' என்ற குரல் 'ஏக இந்தியா' அடிப்படைக்கு முரணானதாம்

தன்மானம் பிறப்பித்தக் கோரிக்கைகள் அர்த்தமற்றவையாம், அற்பமானவையாம்

தொடர்பில்லாத உலகவிவகாரங்களை கருத்தில் கொள்ளவேண்டுமாம்

நேரு பெருமானின் வழக்கமான வசைமாரி

'மொழி வழி மாநிலம் வேண்டும்' என்ற மக்களது தெளிவான உரிமைக் குரல் 'ஏக இந்தியா' என்ற ஏகாதிபத்திய அரசியல் அமைப்பினைச் சிறிது சிறிதாக உருக்குலைத்து விடும் என்ற தங்களது அச்சத்தை மூடி மறைக்க ஏதேதோ காரண விளக்கங் காட்டி 'மொழி வழி மாநிலம் கூடாது' என்று எதேச்சாதிகாரமாக முடிவு செய்துவிட்டனர், இந்தியப் பேரரசின் மூலவர்களான வடநாட்டு 'ஏகாதிபத்தியவாதிகள்.

மாநிலக் குழுவின் சிபாரிசுகள்மீது தாங்கள் மேற்கொண்ட மிகப் பிற்போக்கான முடிவுகளை விளக்கி, வானொலி மூலம் பிரதமர் பண்டித நேரு பேசியிருக்கிறார்.

இந்தியத் துணைக் கண்டத்து மாநிலங்களைத் திருத்தி அமைக்கும் பிரச்சினைக்கு எள்ளளவும் தொடர்பில்லாத உலக விவகாரங்கள் சிலவற்றைச் சுட்டிக் காட்டி, அந்த உலக விவகாரங்களில் தனக்குள்ள ஈடுபாட்டின் விகிதாச்சார அளவைச் சொல்லி, அவற்றை மனதில் கொண்டு, இந்தியத் துணைக் கண்டத்து மக்கள், தனது எதேச்சாதிகார முடிவைக் கைகட்டி வாய் பொத்தி ஏற்றுக்கொள்ள வேண்டுமென கட்டளையிட்டிருக்கிறார் பிரதமர் நேரு.

"மாநிலப் புது அமைப்பு குறித்த சிபாரிசுகள் பற்றி சர்க்கார் மேற்கொண்ட முடிவுகள் சம்பந்தமாக உங்களிடம் கூற நினைக்கிறேன்; ஆனால், அதற்கு முன்பாக, நாம் வாழும் உலகத்தைப் பற்றியும், நாம் சமாளிக்க வேண்டிய பெரிய பிரச்சினைகளைக் குறித்தும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பரந்த கண்ணோட்டத்துடன்தான் நாம் எதையும் கவனிக்க வேண்டும்; இல்லாவிடில் அற்ப விஷயங்களைப் பற்றிய சில்லறைப் பூசல்களில் சிக்கிக்கொண்டு தடுமாறிக் கொண்டிருப்போம்,"

என்ற பீடிகையுடன் துவங்குகிறார் பண்டிதர்.

'பரந்த கண்ணோட்டம்' குறித்த அவரது கருத்து, உள்நாட்டில் தங்கள் தங்கள் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் குரல் எழுப்புவோரது கொதிப்பேறிய உள்ளத்தைக் குளிரவைக்க, தனது மகத்தான 'இராஜ தந்திரத்தினுல்' கோர்த்துள்ள மணிவாசகம் என எண்ணினார் போலும் பண்டிதர்!

அவரது மணிவாசகம், அவர் சார்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த என். வி. காட்கில் அவர்களால், 'மிகப் பிற்போக்கானது' என்ற நற்சாட்சியையே பெற உதவியிருக்கிறது.

மக்களது தன்மான உணர்வு பெற்றெடுத்தக் கோரிக்கைகளை, 'அற்ப விஷயங்'கள் என்று வர்ணித்திருப்பது, பண்டித நேருவினது பெரிய மனித சுயவிளம்பரத்திற்கு எடுத்துக்காட்டாக அமைவதாகவே முற்போக்காளர் கருதுகின்றனர்.

"இன்றைய உலகில் உள்ள முக்கியமான அம்சம் அணுசக்தியும், அதன் பயங்கரச் சின்னங்களான அணுகுண்டுகளும்தான்; இந்தப் பயங்கர ஆயுதங்கள் மனிதவர்க்கத்தின் மீது ஏவிவிடப்பட்டால் நம்முடைய நம்பிக்கைகள் எல்லாம் சிதறுண்டு போய் மனிதவர்க்கமே அழிந்து விடும்.

"இம்மாதிரி ஆயுதங்களை எல்லாம் உற்பத்தி செய்வதையும், சோதனை செய்வதையும் நாம் கண்டித்து வருகிறோம்; சமாதானத்தைப் பற்றி நாம் பேசி வருகிறோம்; நம்முடைய வெளிநாட்டு உறவுகளிலும் இதே கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறோம்; பஞ்சசீலம், சமாதானமாகக் கூடிவாழ்தல் இவை பற்றியும் நாம் பேசி வருகிறோம்; ஆனால், அணு ஆயுதங்கள் தம்முடைய நாசப்பாதையில் வெற்றிகரமாகப் போய்க்கொண்டிருந்தால், இதற்கெல்லாம் அர்த்தமே இருக்காது.

"உலக சமாதான வளர்ச்சிக்காக நாம் பாடுபட்டு வந்திருக்கிறோம்.

"இன்னும் சில நாட்களில் ஆறாவது குடியரசு தின விழா கொண்டாடப்போகிறோம்.

"இந்த ஆறு ஆண்டுகளில் நாம் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் கண்டிருக்கிறோம். நமது சாதனைகளைக் கண்டு உலகம் வியக்கிறது (!) இப்போது இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பிக்கப்போகிறோம். இதற்கு மக்களின் மகத்தான முயற்சி அவசியமாகும்; அத்துடன், ஒற்றுமை, ஒத்துழைப்பு, கடும் வேலை ஆகியவையும் மக்களிடத்தில் வேண்டும்.

"இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டுதான் மாநிலப் புனரமைப்பு விஷயத்தை நாம் பரிசீலிக்க வேண்டும்,";

என்று பீடிகை போட்டிருக்கிறார் பிரதமர்.

பின்னர், நாம் வேறொரு இடத்தில் தந்திருக்கிற இந்திய சர்க்காரின் முடிவுகளின் சுருக்கத்தை விரிவாக, தனித் தனியாக விளக்கியிருக்கிறார் பிரதமர்.

"மாநிலங்களின் எல்லைகளைப் பொறுத்துத் தொடர்புடைய மாநிலங்களிடை உடன்பாடு ஏற்பட்டிருந்தால் ஒழிய, குழுவின் சிபாரிசுகளை சர்க்கார் அப்படியே ஒப்புக்கொண்டிருக்கிறது. உடன்பாடு ஏற்பட்டால் மேலும் சில மாறுதல்கள் ஏற்படுவதும் இன்னும் சாத்தியமானதேயாகும்," என்று பேசியிருக்கிறார் நேரு.

மண்டல மன்றங்கள் அமைப்புக் குறித்துக் குறிப்பிட்ட அவர், 'எந்த மாநிலமும் தனித்து நிற்க முடியும் என்பது 'ஐக்கிய இந்தியா' என்ற அடிப்படைக்கே முரணானது என்பது மட்டுமல்ல — அது அர்த்தமற்ற ஒன்றுமாகும்' என்று குறிப்பிட்டு, 'ஏக இந்தியா' என்பது ஏகாதிபத்திய 'அரசியல் அமைப்புத்தானே தவிர, மக்களின் விருப்பத்தின்மேல் உருவான ஒன்றல்ல என்பதைத் தெளிவாக்கியிருக்கிறார், பிரதமர்.

'சர்க்காரது முடிவுகளை யாவரும் விருப்பு வெறுப்பின்றி பரிசீலனை செய்யவேண்டும்' என்றும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார், தனது வழக்கமான பாணியில்!

கே. ஏ. மதியழகன்

சுற்றுப்பயணம்

ஜன 21 : உடையார்பாளையம்
22 : துறையூர் (திருச்சி மாவட்டம்)
26 : அரூர் (சேலம் மாவட்டம்)
28 : அண்ணாமலைநகர்
29 : சிதம்பரம்

நன்றி அறிவிப்பு

"பொங்கல் வாழ்த்து அனுப்பிய நண்பர்களுக்குத் தனித் தனியே கடிதம் எழுத இயலாமைக்கு வருந்துகிறேன். எல்லோருக்கும எனது நன்றியையும, வாழ்த்தையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்."

என்று, தோழர் கே ஏ. மதியழகன் அவர்கள் தெரிவித்துக் கொள்கிறார்.

'திருடியின் மகன்' என்ற...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

'திருடியின் மகன்' எனக் கிண்டல் செய்துவந்தார்களாம்.

இத்தகைய அவமானத்தைத் தாங்க முடியாமல் அப்பள்ளிமாணவன் ஆத்திரமடைந்து பெற்ற தாயையே கொன்றுவிட்டான்.

சென்னை 50-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

18—1—56 இரவு 9 மணிக்கு, சென்னை 50-வது வட்ட தி மு. கழகச் செயற்குழுக் கூட்டம், கழகக் கட்டிடத்தில் நடைபெறும் அதுபோது, 12—2—56-ல் நடத்த இருக்கும் பொதுக்கூட்டத்திற்கான நிதி வசூல் பற்றியும், மாநில மாநாட்டிற்கு நிதி அளிப்பது பற்றியும் முடிவு செய்யப்படும்.

மறைமலை அடிகள் மன்றம்

18—1—56 மாலை 5½ மணிக்கு, சென்னை-புரசை அன்னதான சமாஜத்தில், மேற்படி மன்ற நான்காம் ஆண்டு நிறைவு விழாவும், திராவிடர் திருநாளும், திரு ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறும். துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், திருவாளர்கள் மாயாண்டிபாரதி, கு. இராசவேலு, திருமதி சண்பகவல்லி அம்மையார் ஆகியோர் பேசுவர்.

ஐந்து மண்டல மன்றங்கள் அமையுமாம்

பொது கவர்னர், உயர் நீதிமன்றம் ஏற்படுத்துவார்களாம்

திராவிட மாநிலங்கள் தென் மண்டலத்தில்

புதுடில்லி, ஜன. 16—

இந்தியத் துணைக் கண்டத்தில் அமைக்கப்போவதாக இந்தியப் பேரரசு அறிவித்திருக்கிற மண்டல மன்றங்கள் கீழ்க்கண்டவாறு அமையுமாம்.

தெற்கு—வடக்கு—கிழக்கு—மேற்கு—மத்திய என்று ஐந்து மண்டலங்கள் அமையும்.

தெற்கு மண்டலம் :
சென்னை, ஆந்திரா, கேரளம், மைசூர், தெலிங்கானா.

வடக்கு மண்டலம் :
பஞ்சாப், பெப்சு, இமாசலப் பிரதேசம், இராஜஸ்தான், டில்லி.

கிழக்கு மண்டலம் :
பீகார், ஒரிசா, மேற்கு வங்கம், அசாம், மணிப்பூர், திரிபுரா.

மேற்கு மண்டலம் :
மராட்டியம், குஜராத், மத்திய சர்க்காரால் நிர்வகிக்கப்படவிருக்கும் பம்பாய் நகரம்.

மத்திய மண்டலம் :
உத்தர பிரதேசம், புதிய மத்திய பிரதேசம்.

இந்த ஐந்து மண்டல மன்றங்களும், அவற்றுள் அடங்கும் மாநிலங்களின் பொதுப் பிரச்சினைகளைக் கவனிக்குமாம். மாநிலங்களிடையே சுமூகமான உறவுகள் ஏற்படுவதற்கும் இது உதவியாக விருக்குமாம்.

சில பிரதேசங்களில், பொதுவான கவர்னர்கள், உயர்நீதி மன்றங்கள், பொதுப் பணித் தேர்வுக் குழுக்கள் அமைக்கப்படும் என்றும் சர்க்கார் தரும் விவரங்கள் கூறுகின்றன.

இந்த மண்டல மன்றங்கள், ஒவ்வொரு மாநிலமும் தங்கள் தங்கள் மாநிலமே முக்கியம் என்ற உணர்ச்சி பெறுமல் தடுக்க வேலை செய்யுமாம்.

****

திராவிட மாணவர் முன்னேற்ற கழக அமைப்புக் குழு

ஜன. 28-ந் தேதி

அண்ணாமலை நகரில்

நடைபெறும்

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் குழு, தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்தையடுத்த அண்ணாமலை நகரில், 28—1—56 சனிக்கிழமையன்று மாலை 3-மணிக்கு நடைபெறும்.

சிறப்பு அழைப்பின்பேரில் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும் கலந்துகொள்ளுகிறார்கள்.

அமைப்புக் குழு, திராவிட மாணவர் முன்னேற்றக் கழக எதிர்கால வளர்ச்சிபற்றிய பல பிரச்சினைகள் குறித்து விவாதித்து முடிவு செய்ய இருக்கிறது.

T. K. பொன்னுவேலு,
அமைப்பாளர்,
திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

****

திராவிடர் திருநாள்

★

கொட்டாம்பட்டி
மங்கைத் திடலில்
18—1—56 மாலை 4½ மணிக்கு
தலைவர் : வீ. சின்னத்தம்பி
பேசுபவர் :
சத்தியவாணிமுத்து

★

சாத்தான்குளம்
தி. மு. கழக 3-வது ஆண்டு விழாவும், திராவிடர் திருநாளும்
காந்தி மைதானத்தில்
19—1—56 இரவு 7 மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ஆ. மீ. அலிசேக் மன்சூர்

தாயகத்தை மீட்க...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"அண்மையில் நடைபெறவிருக்கும் திருச்சி மாநில மாநாட்டிலே உங்களனைவரின் கருத்துக்களையும் கேட்டு அதன்படி நடக்கவிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்; இந்தப் பெருமுயற்சிக்கு நீங்கள் துணையாக இருங்கள். இந்த நாட்டை ஆள்வது கட்சியோ தலைவர்களோ அல்ல; 'தமிழனு—வடநாட்டவனு' என்பதே பிரச்சினை! கட்சி ஆட்சிக்குப் பதிலாக மக்கள் ஆட்சி மலரவேண்டும் என்பதே எங்கள் நோக்கம்!

"நீதிக் கட்சியை வளர்த்த தியாகராயர் வாழ்ந்த பகுதியிலே நீங்கள் வாழ்கின்றீர்கள்; நம் கொள்கைமீது பாசம் வைத்து அதை வளர்த்து வருகின்றீர்கள்; இன்றைக்கு நாட்டில் நிலவிவரும் அவல நிலைமை மாற, இந்தப் பகுதியிலுள்ள தோழர்கள் தங்களின் நல்ஆதரவைத் தரவேண்டும்.

"நம் நாட்டிலுள்ள ஒரு மாவட்டத்திற்குக்கூட இலங்கை ஈடாகாது; அந்தச் சின்னஞ் சிறிய இலங்கைதான் ஐக்கிய நாட்டுச் சபையிலே ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் மத்தியிலே வீற்றிருக்கும் 'உயர் நிலை' பெற்றுள்ளது. ஆனால் சேரன் ஆண்டான் — சோழன் ஆண்டான் — பாண்டியன் ஆண்டான்—பல்லவன் ஆண்டான்—இமயத்தில் கொடி பொறித்தான் என்ற வரலாற்றைத் தரும் தமிழ் நாடு இன்று அடிமைப்பட்ட நிலையிலே உழன்று கொண்டிருப்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்."

பரீட்சை எழுதும் பெண்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் சாலை நெடுக வழிகளில், இளைஞர்களின் கேலிக்கும், கிண்டலுக்கும், குறும்புகளுக்கும் ஆளாகாமல் பார்த்துக்கொள்வதற்குத்தான் என்றும் கூறப்படுகிறது.

இந்தத் தகவலைத் தந்த டில்லி மாநில போலீஸ் தலைமை அதிகாரி, கடந்த ஆண்டுத் துவக்கத்தில் பள்ளிகள், கல்லூரிகளுக்குச் சென்று திரும்பும் மாணவிகளைப் பல இளைஞர்கள் 'கலாட்டா' செய்ததாகவும், பல தீச்செயல்கள் நடைபெற்றதாகவும் குற்றம் கூறப்பட்டது என்றும், அதை ஒட்டி பல பெண் பள்ளிகளிலும். பஸ் நிற்குமிடங்களிலும், போலீசார் நிறுத்திவைக்கப்பட்டனர் என்றும், இதனால் பல குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு இந்தவகைக் குற்றம் புரிவது தடுக்கப்படுகிறது என்றும் அந்த அதிகாரி பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ